செய்தி வெளியீடு எண்:030 நாள் : 12.01.2016

# செய்தி வெளியீடு

இன்றைய நாகரீக உலகில் சுற்றுச்சூழல் மாசு தொழிற்சாலைகளால் மட்டும் ஏற்படுவதில்லை. மக்கட்தொகை பெருக்கம், வாகனப்புகை, உள்ளாட்சி அமைப்புகளினால் வெளியேற்றப்படும் கழிவுநீர், நகரத் திடக் கழிவுகள் எரிப்பது போன்றவற்றால் சுற்றுச்சூழல் மாசுபட்டு வருகின்றது. இவ்வகையான மாசு இயற்கையே சீர்செய்து கொள்ளும் அளவினை தாண்டி ஏற்படுவதால், பலவிதமான சுற்றுச்சூழல் பிரச்சனைகளை நாம் அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதில் மக்களின் பழக்கவழக்கத்தினால் ஏற்படும் காற்று மாசும் ஒன்றாகும். போகி மற்றும் தீபாவளி பண்டிகையால் ஏற்படும் காற்று மாசு மற்றும் ஒலி மாசு குறிப்பிடத்தக்கதாகும்.

சுமார் இருபது வருடம் வரை நமது வீடுகளில் சேகரம் ஆகும் இயற்கை பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டு கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் ஏற்பட்ட காற்று மாசுபாடு இயற்கையால் ஜீரணிக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்துள்ளது.

ஆனால் இன்றைய சூழலை எடுத்துக்கொண்டால், தற்பொழுது போகி பண்டிகையின் பொழுது பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், ரப்பர் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப், காகிதம், இரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் காற்று மாசு ஏற்படுவதோடு, போகி அன்று எரிக்கப்படும் பொருட்களால் ஏற்படும் அடர்ந்த புகையின் காரணமாக விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது. சென்னை நகரில் போகி அன்று எரிக்கப்படும் மேற்படி பொருட்களால் புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமங்கள்

ஏற்படுவதோடு விபத்துகளுக்கும் காரணமாக உள்ளது. பழைய பிளாஸ்டிக் பொருட்கள், டயர் மற்றும் டியூப் போன்றவற்றை எரிப்பதால் வெளிப்படும் நச்சு வாயுக்களால் மூச்சு திணறல், கண் எரிச்சல் போன்ற நோய்கள் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

இத்தகைய செயல்கள் பொது மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமையால் ஏற்பட்டு வந்தது. இதனை தவிர்க்க, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த பல ஆண்டுகளாக போகிபண்டிகைக்கு முன் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், காவல்துறை, தீயணைப்பு துறை மற்றும் சென்னை மாநகராட்சியின் உதவியுடன் விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த 4–5 வருடங்களாக பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ரப்பர் டயர், டியூப் போன்றவை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது.

இதை மென்மேலும் தீவிரப்படுத்தி தமிழகத்தில் சுற்றுச்சூழல் மாசு படாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், போகி பண்டிகைக்கு இரு தினங்களுக்கு முன் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டு சென்னை நகர மக்களிடையே பழைய பொருட்கள் எரிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகள், சுற்றுச்சூழல் பாதிப்புகள் போன்றவற்றை எடுத்து கூறிவருகின்றது.

மேலும் இந்த வருடமும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாட்டிலுள்ள முக்கிய நகரங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கும் சென்றடையும் வண்ணம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள எஃப். எம் ரேடியோக்கள் மூலம்

ரேடியோ சிட்டி (91.1 MHz) - சென்னை

ரேடியோ மிர்ச்சி (98.3 MHz) - சென்னை, மதுரை, கோயம்புத்தூர்

ஹலோ எஃப் . எம் (106.4 MHz) - சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி.

**11–01–2016** முதல் **13–01–2016** முடிய ‘‘புகையில்லா போகி’’ விழிப்புணர்வு பிரச்சாரம் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

புகையில்லா போகி கொண்டாடி, காற்று மாசினால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தவிர்த்து, பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடுவோம்.

*******

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**